ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2111/55 - 2019 පෙබරවාරි මස 22 වැනි සිකුරාදා - 2019.02.22
*2111/55 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

தொடர் இல.: 4-3/2/2016/CEB/113.
பிரதேச செயலாளர் தொடர் இல.: ஹங்கு/3/2/1/116.

புதுப்பிக்கத்தக்க மின்சக்தியைப் பெற்றுக் கொள்வதற்கான பரிமாற்றம் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்ட ராகலை கிறீட் உப நிலையத்தை அமைப்பதற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

நுவரெலியா மாவட்டத்தில், ஹங்குரங்கெத பிரதேச செயலாளர் பிரிவில், நில அளவை ஆணையாளரின் பி. பி. என். 3221 இல் குறிப்பிடப்படும் காணித் துண்டின் விபரம் பின்வருமாறு:

*1.* **துண்டு இல.** *1*

காணியின் பெயர்: ரஹதுன்கொடவத்தை; விபரம்: சுமார் 25 வருடங்கள் கொண்ட தேயிலைச் செய்கை உண்டு; உரிமை கோருவோர்: மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இல. 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02; விஸ்தீரணம்: 1.6187 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹங்குரங்கெத பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உரிமைகோரல் தொடர்பான உறுதிகள் போன்றவற்றை நேர்முக விசாரணையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அமில நவரத்ன,
பிரதேச செயலாளர்,
ஹங்குரங்கெத.

பிரதேச செயலகம்,
ஹங்குரங்கெத,
2019, பெப்புருவரி 20.

3 - 475

1A - G 29524 - 27 (2019/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.